## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(நவம்பர் 25-ம் தேதி முதல் நவம்பர் 29-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (20.11.15- 23.11.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 87.98 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 28- 33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24- 25 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 6- 8 |
| ஒப்புஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 87- 95 |
| ஒப்புஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 76- 90 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0 |
| காற்றின் திசை (டிகிரி) | 0 |

**29.11.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>25.11.15 | நாள் 2<br>26.11.15 | நாள் 3<br>27.11.15 | நாள் 4<br>28.11.15 | நாள் 5<br>29.11.15 |
| மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 7 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 31 | 31 | 32 | 32 | 31 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24 | 23 | 22 | 22 | 23 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 3 | 2 | 2 | 4 |
| ஒப்புஈரப்பதம் (சதவீதம்) | 62- 90 | 59- 79 | 46- 82 | 46- 85 | 58- 86 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 13/ வடக்கு | 9/ வடக்கு | 6/ வடகிழக்கு | 7/ மேற்கு | 7/ மேற்கு |

**வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்**

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | நாற்று பருவம் | நெல் நடவு செய்யப்படாமல் உள்ள பகுதிகளில் மழை நின்றபிறகு நடவு செய்தலை துரிதமாக முடிக்கவும். |

| | | |
|---|---|---|
| நெல் | தூர்கட்டும் பருவம் | தற்பொழுது நிலவும் மிதமான மேகமூட்டம், மழை மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் நெற்பயிரில் தண்டுத்துளைப்பானின் தாக்குதல் காணப்படுகிறது. விளக்குப் பொறிகள் அமைத்து பூச்சியின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். பொருளதார சேதநிலை இரண்டு முட்டைக்குவியல்கள்/ ச.மீ. அல்லது 10 சத நடுக்குருத்து வாடியிருத்தல் அல்லது 2 வெண்கதிர்கள் தோன்றினால் *டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம்* என்ற முட்டை ஒட்டுண்ணியை 5 சி.சி./ எக்டர் என்ற அளவில் வயலில் விடவும். தாக்குதல் தீவிரமாக இருந்தால் மோனோகுரோட்டோபாஸ் 1 லிட்டர்/ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| பருத்தி | சப்பைகட்டும் பருவம் | தற்பொழுது நிலவும் மிதமான மேகமூட்டம், மழை மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் பருத்தியில் இலைப்பேன், அசுவினி மற்றும் பச்சைத்தத்துப்பூச்சியின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 100 மி.லி./ எக்டர் அல்லது மீத்தைல் டெமட்டான் 25 EC 500 மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கத்தரி | காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வானிலையில் கத்தரியில் தண்டு மற்றும் காய்த்துளைப்பானின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட தண்டுப்பகுதிகளை அகற்றவும். குளோர்பைரிபாஸ் 20% EC 1.0 மி.லி./ லிட்டர்அல்லது எமமெக்டின் பென்சோயேட் 5% SC என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். |
| பாசிப்பயறு | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | தற்பொழுது நிலவும் மிதமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் பாசிப்பயறில் காவடிப்புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த குயினால்பாஸ் 1 மி.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| | | தற்பொழுது நிலவும மிதமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் பாசிப்பயறில் மஞ்சள் தேமல் நோய் காணப்படுகிறது. வெள்ளைஈ மூலம் இந்நோய் பரவுகிறது. பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி அழிக்கவும். இப்பூச்சிகளை கவர்ந்து அழிக்க மஞ்சள் ஒட்டும் பொறி 12/ எக்டர் என்ற அளவில் அமைக்கவும். தாக்குதல் பொருளாதார சேதநிலையை தாண்டும்போது டைமெத்தோயேட் 500 மி.லி./ எக்டர் அல்லது மீத்தைல் டெமட்டான் 500 மி.லி./ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

குறுஞ்செய்தி-: மழை: நவம்பர் 29: 7 மி.மீ. பாசிப்பயறு- மஞ்சள் தேமல் நோய்- மீத்தைல் டெமட்டான் 500 மி.லி./ எக்டர் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி